DUPLICATE

புதினப் பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

விரோதி ௵ (1889)
ஆவணி ௴ ௨௨
தாபகமானது.

பத்திரிக் கிரயம்.
(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)
யாழ்ப்பாணப்பட்டினம்: ஆண்டு ௧-க்கு ரூ. [illegible]
வெளியூர், இந்தியா: ,, ரூ. [illegible]
தொலைவாய்ப்பகுதி: ,, ரூ. [illegible]
தனிப்பிரதி சதம் [illegible]

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

“எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்.”

விளம்பர விகிதம்.
ரூ. ச.
முதன்முறைக்கு:— ஒருகலம் [illegible]
,, அரைக்கலம் [illegible]
,, கால்கலம் [illegible]
,, ஒரு அங்குலம் [illegible]
அடிக்கடி முறைதவறாது வரும் விளம்பரங்களின் விகிதம் [illegible]

புத்தகம் - ௨௭. யாழ்ப்பாணம்:—நள ௵ ஆனி ௴ ௧௫ ௳ ௧௯௧௬-ம் ௵ ஜூன் ௴ ௨௯. இலக்கம்—௫0

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லனைர்ச்சி தேக்கச் சிவம்பூத்த நிகமாக மக்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப் பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
போர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேறு மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக,
ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

விளம்பரம்.

THE CHEAPEST HOUSE
FOR HIGH CLASS SILK CLOTHS.

நம்பிக்கையும், நாணயமும், சகாயமுமான
பட்டு வர்த்தகசாலை எது?

காசியிற் பிரபல பட்டுவர்த்தகர்களாகிய
கே. எஸ். முத்தையா கம்பெனியார்
என்று தெரிந்துகொள்ளுங்கள்.

இங்கு, அநேக நவீன கலர்களிற் புதுமாதிரியான பட்டுப்புடைவைகள், ரவிக்கைக் குட்டைகள், தாவணிகள், பிள்ளை (பஷ்க்காறு) வேட்டிகள், உலைக்குட்டைகள், நாற்மடித் திவிசுகள், வெண்பட்டு தோத்தி, அங்க வஸ்திரம், சோமன் ஜோடி முதலிய பலவிதமான பட்டாடைகளுஞ் சகாயமான விலைக்குச் சித்தமாக விருக்கின்றன. விபரமான கேட்லாக் விரும்பினால் இனாமாகப் பெற்றுக்கொள்ளலாம். உடனே எழுதுங்கள்.

K. S. Muthiah & Co.,
“Silk House”,
BENARES, CITY.

பனைமரங்கள்.

நூறு பனை மரங்களிலிருந்து ௫00 ரூபா பெறுமதியான வரும்படி பெறலாம்.

இது நூறு மரங்களிலிருந்து வரக்கூடிய வரும்படியின் சராசரி மதிப்பு. இது தென்னைகளிலிருந்துவரக்கூடிய வரும்படியிலும் அதிகம். தக்க முயற்சி செய்தால் யாழ்ப்பாணத்திலே இலங்கையின் மற்றெந்தப் பகுதிகளிலும்பார்க்கப் பனைமரங்களிலிருந்து அதிக லாபம் பெறலாம்.

இடைவிடாது கள்ளுங் கட்டினால் மரத்துக்குமரம் வித்தியாசமின்றி எந்தமரத்திலும் ஒரேமாதிரியாகக் கள்ளுச் சேர்க்கலாம். முதல் வருஷத்தில் இப்படி இல்லாதிருக்கக்கூடும் ஆனால் இரண்டாம் வருஷத்தில் எந்த மரத்திலும் கள்ளு நல்லாய்ச் சேர்க்கலாம் இரண்டாம் வருஷப் பலனையடைவதற்கு முதலாம்வருஷத்தில் நல்லவேலை செய்ய வேண்டும்.

இரண்டாம்வருஷத்தில் நூறு நாட்களுக்காகுதல் ஒவ்வொரு மரத்திலுமிருந்து ஒவ்வொரு கலன் கள்ளுச் சேர்க்கலாம். ஆகவே நூறு மரங்களிலிருந்து ௧0,000 கலன் கள்ளுச் சேர்க்கலாம்.

ஒவ்வொரு கலன் கள்ளிலிருந்தும் ஒன்றேடு ஐந்திலொரு ருத்தல் பனங்கட்டி செய்யலாம். ஆனால் ஒருருத்தல் வீதப்படி கணக்கிட்டாலும் ௧0,000 ருத்தல் அல்லது ௨00 கண்டி பனங்கட்டி செய்யலாம்.

குறைந்தபட்சமாக கண்டி ஒன்று ரூபா உ௰ வீதமாகப்பார்த்தாலும் நூறு மரங்களிலிருந்து ௫00 ரூபா வரும்படி பெறலாம்.

இதைப்பற்றி முழுவிபரங்களு மடங்கியுள்ள பிரபந்தங்களை எங்களுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—
இலங்கைச் சீனிக் கம்பனியார்,
வல்லுவெட்டித்துறை.

கட்பார்வை.

குளிர்ச்சியான சந்திரகாந்த வில்லைபோட்ட
கண்ணாடிகளைப் பாவித்துப்
பார்வையைக் காப்பாற்றுங்கள்.
திறமான மூக்குக் கண்ணாடிகள்
எங்களிடம்
சகாயவிலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

எம் கல்லேணா அன் சன்ஸ்,
பறங்கித்தெரு,
யாழ்ப்பாணம்.

S. U. N. & Co.
Weaving Silk Manufacturers,
BENARES CITY, U. P.

பெரிய கம்பெனி. நாணயமான சரக்குகள்

இந்தக் கம்பெனியில் நெசவாகிற உத்தமமான பனாரிஸ் பட்டுச் சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், பஸ்காறு, காஷ்மீர் போர்வைகள், ருத்திராட்சங்கள், குழந்தைகளின் விளையாட்டுச்சாமான்கள் முதலான அபூர்வமான சாமான்களைப் பற்றிய 68 பக்கமுள்ள ஒரு “காட்லாக்”கும் ஒரு காசிவிசுவேசுவரர் படமும் கோருகிறவர்களுக்கு இனாமாய் அனுப்பப்படும்.

S.U.N.& Co.
BENARES CITY.
KASHI
VISHWESHWAR.

எஸ்.யூ.என். அண்டு கம்பெனி,
பனாரிஸ் ஸிட்டி.

பம்பாய்ச சேலைகள்.

மிகவும்நாணயமானது! மிகவும்சரசமானது!!
16 முழ நீளம்.

இந்தச் சேலைகள் நேர்த்தியான வெள்ளை மல்லில் மத்தியில் மாங்காய், அன்னம், கிளி, சூரியப் பிறை, சந்திரப் பிறை, நக்ஷத்திரம், புட்டாக்கள்; இவைகள்போல்ஒவ்வொரு சேலைகளிலும் ஒவ்வொருவிதமுண்டு. கரைகளிலும் முந்தானைகளிலும் விசித்திரமான புஷ்பக் கொடிகள் போட்டிருக்கும். இந்தச் சேலைகள் பம்பாயிலிருந்து ஸ்பெஷலாகக் கொஞ்சந்தான் தருவித்திருக்கிறோம். வேண்டியவர்கள் கூடிய சீக்கிரத்திற தருவித்துக்கொள்ளவும். செட்டால், சிங்கப்பூர், மோரீஸ் முதலிய தேசங்களுக்கு முற்பணமில்லாமல் வி. பி. யில் அனுப்ப முடியாது. சேலை 1-க்கு கிரயம் ரூபா 2, அணா 4.

கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்ட்,
மதராஸ்.

ஆறுமுகநாவலரவர்களால்
அச்சிடப்பிப்பிக்கப்பட்ட
தமிழ்ப்புத்தகங்கள்
வண்ணார்பண்ணைச்
சைவப்பிரகாசவித்தியாசாலையில்
விற்கப்படும்.
V. P. போஸ்டில் அனுப்பவேண்டுமேனோர்
தபாற்செலவுமாத்திரம் முந்தி அனுப்பல்
வேண்டும்.

சாலாமிஸ்ரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளுமிதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே யிப்போது இந்தலேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, ருமாஸ்தகா, பீதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அபரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாயபிராணிப்பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலி வகைகள் சேர்த்துச் செய்யபட்டிருக்கிறது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இறாத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0 அரைறாத்தலுக்கு ரூபா ௫0. கால் றாத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம.

விலாசம்:— க. ஆறுகம்பிள்ளை,
ஆயுர்வேத வைத்தியசாலை,
இல. 96 முதல் மருதானை,
கொழும்பு.

ஓடுகளும் சிமெந்தும்.

BEST PORTLAND CEMENT
TILE BRAND

பெருந்தொகையான ஓட்டு மார்க்குச சிமெந்தும், பேர்பெற்ற மங்களூர் ஓடுகளும், இரட்டை யானை மார்க்கு ஓடுகளும் விலைக்கிருக்கின்றன. வந்து பாருங்கள்.

யோசேப் அன் கம்பெனி,
தேவரீர்க் குளத்துக்கு முற்பக்கம்,
யாழ்ப்பாணம்.

விஜய சீலம்.

மேற்கண்ட பெயரினையுடைய ஒரு சிறந்த நவீன கதை, “வீரசிங்கன் கதை” “உதிர பாசம்” முதலியவற்றின் ஆசிரியராகிய சி. வை. சின்னப்பாபிள்ளையவர்களால் சாதாரண வசனநடையாக இயற்றப்பட்டு வெளிவந்திருக்கின்றது. இதன் பெருமை இதனை வாசிப்போர்க்கே நன்கு விளங்கும்.

வண்ணை ஸ்ரீ சண்முகநாத அச்சியந்திரசாலையிலும் வல்வெட்டித்துறை சி. வை. சின்னப்பாபிள்ளையிடத்திலும விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம.

விலை பிரதி ௧-க்கு ரூபா ௧.

இலங்கை, இந்தியா தபாற் செலவு சதம் ௧௰.
தொலைவாய்ப்பகுதிக்கு ,, ,, ௨௰.

இந்துஸ்தான் ஐக்கிய விமாக் கம்பனி.

இதன் பிரதான ஆபீஸ்: இந்துஸ்தான் கட்டடம், கல்கத்தா.

இதன் மூலதனம் பத்துக்கோடி ரூபா.

இந்தியாவிலே பங்காளிகளுக்கு அதிகலாபத்தைக் கொடுக்கக்கூடிய கம்பனி இதுவன்றி வேறில்லை. சனங்களின் சொந்தமாயுள்ள விமாக்கம்பனி இதுவொன்றே.

இதில் விமாத்தீர்ப்பவர்களுக்கு ஒருபோதும் நட்டம் வரமாட்டாது. அவர்கள் இக்கம்பனிக்கு வரும் லாபத்திலும் பங்குடையவர்களாவார்.

ஆண் பெண் என்னும் வித்தியாசமும், பயண வித்தியாசமும், தொழில்வித்தியாசமும், மரண வித்தியாசமும் இக்கம்பனியாரால் கவனிக்கப்படமாட்டாது.

பணங் கட்ட முடியாது தங்கள் "பொலிசிகளை" விட்டுவிடுவோர்க்கு மற்றக் கம்பனிகள் கொடுக்கும் தொகையிலும் பெருந்தொகை உடனே கொடுக்கப்படும். அல்லது அவர்களின் மரணத்தின்பின் அவர்களாற் குறிக்கப்படுவோர்க்குக் கொடுக்கப்படும்.

பணங்கட்டாதுவிட்ட "பொலிசி"களைக் காலவரையின்றி நினைத்தநேரத்திற் புதுப்பித்துக் கொள்ள இடங்கொடுக்கப்படும்.

கட்டப்படும் பணம் ஆருக்குக் கொடுக்கப்படவேண்டுமோ அவருடைய சொந்த வீட்டில் அது கொடுக்கப்படும்.

உத்தியோகஸ்தருள்ளும் சங்கத்திலும் தலைத்தரமான பிரபுக்களிருக்கிறார்கள்.

இக்கம்பனிக்குக் கட்டவேண்டிய தொகை சிறிது, லாபமோ அதிகம்.

இக்கம்பனியிலும்பார்க்க ஒருவனின் சுகவிருத்திக்கு ஏற்றதாகத் தோற்றுமெதுவும் அனுப்புதலுக்கும் நட்டத்துக்கும் ஏதுவானதாகவேயிருக்கும்.

இக்கம்பனிக்கு அக்கிராசனாதிபதி: கௌரவ மகாராஜா மகீந்திரசந்திரநந்திபகதூர்.

செக்கிரிற்றெறி: சுரேந்திரநாத்தகூர் B A, ஜமீன்தார்.

மற்றைய விபரங்கள் பின்சொல்லப்படுகிறவர்களுக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

(பருத்தித்துறைப்பகுதிக்கு முகாமைக்காரன்)
ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை,
யாழ்ப்பாணம் இந்துகலூரித் தமிழ்ப்பண்டிதர்,
வண்ணார்பண்ணை.

புரொக்டர் M. A. தம்பு,
பிரதான முகாமைக்காரன்,
1 கெயிசர் தெரு, 13 B, 1-ம் குறுக்குத்தெரு,
கொழும்பு.

மெஸ் E. A. ஆர்ணல், பிரயாணமுகாமைக்காரன்.

P. S. விமாத்தீர்த்தவர்கள் தாங்கள்கட்டவேண்டியபணத்தை நேரே எங்களுக்கு அனுப்பவேண்டும். யாழ்ப்பாணத்திலே முகாமைக்காரர் நியமிக்கப்படாத இடங்களுக்கு முகாமைக்காரர் தேவை.

விற்பனவுகாரர் தேவை

எங்கள் யாழ்ப்பாணம், மன்னார் தையல் இயந்திரக் கம்பெனிகளுக்குச் சுறுசுறுப்புள்ள விற்பனவுகாரர் (Salesmen) தேவை. டிஸ்திறிக் மானேசரிடம் முகாமுகமாய்ப் பேசிக்கொள்ளலாம்.

District Manager,
Singer Sewing Machine Coy.,
Main Street,
JAFFNA.

பத்திரக்கிரய வரவு.

	ரூ. ச.
ஸ்ரீ.	
K. ஆழ்வார்ப்பிள்ளை, உடுத்துறை.	9-75
V. கணபதிப்பிள்ளை, அல்வாய் தெற்கு.	5-00
P. S. பொன்னையா, பண்டாரவளை.	3-25
ஆ. கார்த்திகேயர், பருத்தித்துறை.	3-25
K. மைல்வாகனம், மயிலிட்டி.	3-25
வீ. தண்ணுமலை, மருதங்கடவை.	7-00
இ. பொன்னம்பலம், சுண்டிக்குளி.	3-00
R. சின்னப்பா, மல்லாகம்,	11-09
K. வேலுப்பிள்ளை, திரிகோணமலை.	3-65
S. சிற்றம்பலம், அநுராசபுரம்.	6-50
S. வைத்தியநாதபிள்ளை, நாரந்தனை.	6-00
H. O. Fernando, Negombo	1-50
சை. பி. வித்தியாசாலை, குரும்பசிட்டி.	1-00

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்:-கஎ௵ ஜூனிமீ சகஉ.

சுப்பிரமணியக்கடவுள்.—கரு.

தூசனம்.

சுப்பிரமணியக்கடவுள் எல்லா முதன்மையும் எல்லா அனுக்கிரகமுமுடைய சுத்தசாட்குண்ணிய பரிபூரண வஸ்துவாகிய சிவபரஞ்சுடரே என்பது வேதாகமங்களாலும் புராணேதிகாசங்களாலும் பிறபாவித்தைகளாலும் கிரிதீபம்போல காட்டப்பட்டுக்கிடப்பதோர் உண்மையாகும். இத்தப்பெருமான் கொண்டருளிய அருண் மூர்த்தம் அசுந்த மாயா புவன வாசிகளுக்கெல்லாம் வியஞ்சக முற்று அருள் சுரத்தற்குரியதோர் விசேட மூர்த்தமாதலால், இந்த மூர்த்தம் இக்கலிகாலத்திலே விசேடமாகப் பூசிக்கப்படும். இந்த உண்மை அவர் இந்தக் கலிகாலத்தும் அறிவின் மிகக் குறைந்தவர்களாகிய வனசாரர்களுக்கும் அவர்கள் அறியாவினதாகியதோர் வேடத் தாங்கி நின்றுடிய திருவிளையாடல்களால் நன்குற நாட்டப்படும். இங்ஙனம் வேடர்களுட்டாலும் அவர் வெளிப்பட்டு நின்று விளையாட்டயர்வாராயினும், அவர் தத்துவசாலங்கள் அனைத்தையும் கடந்து நிற்கும் தனிமுதல்வர் என்பது வைதிக சைவசாத்திரங்கள் அனைத்தாலும் வலியுறுத்திச் சாதிக்கப்படும்.

இந்த உண்மையைச் சிஞ்சித்தேனும் அறியாத சில மிலேச்ச மதத்தவர்கள், சுப்பிரமணியப் பெருமானுடைய அத்தியற்புத மான்மியத்தை அநாதி சாத்திரங்களாகிய வேத சிவாகமங்களால் அறியுந்தாமின்றி, அவருடைய லீலைகளுள் ஒரு சிலவற்றை எடுத்தோதும் புராணவசனங்களுட் சிலவற்றைத் தூக்கி எடுத்துக்கொண்டு, யானைகண்ட குருடர்போல அவரை ஓர் வனதெய்வமாக எனவு பூசிக்குவாராயினர். இந்தப் புராணங்களிற்றானும் அவருடைய அவாங்மனோகோசர அதீதநிலை பலப்பல இடங்களிலே தெளிவுற விளக்கப்பட்டிருப்பதாகவும், அவற்றை ஆராய்ந்து உண்மையை நாடிக்காண இவர் செய்துகொண்ட பூர்வகன்மம் இவரைச் சிறிதாவது விடாது தடுத்துக்கொண்டது.

புராணங்களுக்கெல்லாம் பல நெடுங்காலத்துக்கு முந்தியன என்று ஐரோப்பிய பண்டிதர்களாற்றானே தெளிவுற நாட்டப்பட்டிருக்கும் வேத சிவாகமங்களிலே சுப்பிரமணியப் பெருமானுடைய பசுபதித்துவம் பரிபூரணமாக நாட்டப்பட்டிருக்க, இந்த மிலேச்சமதத்தவர்கள் மிகப் பிந்தியனவாகிய புராணங்களைக் கொண்டு அவருடைய நிலையை ஆராயப்புகுந்தமை என்கொலோ நாமறிகிலம்! அந்தப் புராணங்களினும் அவருடைய சுத்த சச்சிதானந்த சொரூப நிலையை எடுத்துக்காட்டும் பாகங்களை எல்லாம் புறம்பே ஒதுக்கிவிட்டு, அவர் அறிவிற் குறைந்த வனசரர்களிடத்து ஆடிக்காட்டிய லீலைகளைமாத்திரம் தூக்கி எடுத்துக்கொண்டு, அவற்றால் சுப்பிரமணியக் கடவுளுடைய உண்மைநிலையை நிச்சயிக்கப்புகுந்தது, இவர்களுடைய அறியாமையோ அழுக்காறோ என்பது நாம் சொல்லத்தக்கதல்ல.

ஒரு மாதா ஆனவள் தனது புத்திரரை எல்லாம் அவ்வவர் அறிவுக்கும் வயதுக்கும் தக்கவாறு நடாத்துவள். தன் கைக்குழந்தைக்குப் பாலூட்டுவள். சற்றே வயதின் முதிர்ந்த குழந்தைக்கு அன்னம் ஊட்டுவள். அதனினும் முதிர்ந்த குழந்தைக்கு அன்னத்தைப் பாத்திரத்திட்டுக் கொடுப்பள். கைக்குழந்தைக்குப் பால் ஊட்டுவதால் பால் ஊட்டும் முறையையன்றிப் பிறிதொன்றையும் அவள் அறியாள் என்றுவது, பாலுணவே அக்காலத்து வழக்கமுற்றிருந்தஉணவென்றுவது யாராவது சொல்லத்துணிவர்கொல்லோ! எங்கள் பெருமான் வனசரர்க்கும் தாம் திருவருள் சுரக்குமாறு தமது பெருங்கருணைத்திறத்தால் அவர்களுட் செய்த லீலையை நோக்கி அதுவே அவர் திருவருள் செய்யும் முறை என்றுவது அவர் திருவருள் செய்யும் முறையைப் போதிக்கும சமயநெறி அதுவே என்றுவது விவேகமுடையார் எவரும் சொல்லமாட்டார்.

இனிச் சுப்பிரமணியவணக்கம் வேடவணக்கமாயின் அது அறிவுடை மக்களால் அங்கீகரிகக்கப்பட்டிருக்கமாட்டாது. அறிவுடைமக்கள் எல்லாம் அதனைப் புறங்கண்டொதுக்குவர். அங்ஙனம் ஒதுக்காது அவர் எல்லாம் அவ்வணக்கத்தைத் தாமுங்கொண்டாடி அப்பெருமான் வேடர்களிடத்துச் செய்தலீலையை நோக்கிப் பரவசப்பட்டு நிற்பாராதலின், அப்பெருமான் சுத்த சைவ நிலைக்குரிய கடவுளே என்பது நன்றாக நாட்டப்படும். அல்லாமலும், சுப்பிரமணிய வணக்கத்தின்கண்ணே சமயத்தின் அதீத நிலைக்குரிய பல அந்தரங்கத் துறைகள் அமைந்துகிடத்தலின், இந்த அதீத அந்தரங்கத் துறைகளை வேட வணக்கத்தில் நின்று தோற்றின என்பது ஒரு சிறிதும் பொருத்தமுடைத்தாகமாட்டாது. அது மாத்திரமன்றி அந்தச் சுப்பிரமணிய வணக்கத்தால் உண்மைஞானம் கைவரப்பெற்ற மெய்யடியார் பலர் உளர் ஆதலின, இந்த மெய்ஞ்ஞானம் வேடவணக்கத்தால் அமைவது சிறிதும் கூடாதென்பதற்குக் காரணம், அநாகரிகத் துறைகளின்கண்ணே நாகரிகத்துறைகளைப் புகட்டுங்கால் இரண்டும் ஒன்றோடொன்றுமோதிப் பெரிதும் இடர்ப்படும். சுப்பிரமணிய வணக்கத்தின்கண்ணே இங்ஙனம் ஒன்றுக்கொன்று மாறாய் ஒன்றையொன்று கண்டிக்கும் கொள்கைகள் சிறிதும் இன்றி எல்லாம் ஒன்றனுக்கொன்று அனுகூலமாகவே கிடத்தலின், அவ்வணக்கம் ஆதியிலே சுத்த மெய்ஞ்ஞான சொரூபமே என்பதும், அந்த வணக்கம் அதனை எடுத்தாள்வாரது நிலைக்குத் தக்கதாகப் பல வடிவு கொள்வதாயிற்றென்பதும் சமய விகற்பங்களின் முறைகளை இனிதறிந்த பெரியார்க்கெல்லாம் பெரிதும் உடன்பாடாகும்.

உலகத்திலே நிலவுற்றுவரும் சமயநிலையை நாம் நுண்ணறிவு கொண்டு ஆராயுமிடத்து, சிருட்டியாரம்பகாலத்திலே உண்மைச் சமயமே உலகத்தில் நிகழ்வுற்று வந்ததென்பதும், அது பின்னர்ப் படிமுறையே விகாரப்பட்டுத் தனது உண்மைநிலையிற் திறம்புவதாயிற்றென்பதும் நன்கு நிச்சயிக்கப்படும். இதுபற்றியே எமது சமயம் யுகங்களை நான்காகப் பகுத்து ஆதிக்கட் தருமநெறியிற் திறம்பாத கிரேதாயுகமும் அதன்பின் அந்நெறியிற் படிமுறையே குறைவுற்ற திரேத, துவாபர, கலியுகங்களும் உண்டாம் என்று எடுத்துக்காட்டும். இந்த யுகவட்டம் ஒருகாற்சென்று முடிய, பின்னரும் அவ்வட்டந் தொடங்கி நடக்கும். ஆனல் எந்த வட்டத்தினும் சமயநிலை மேல்நிலையில்நின்று கீழ்நிலைக்கு இறங்குவதன்றிக் கீழ்நிலையில் நின்று மேல்நிலைக்கு ஏறுவது காணப்படாது. ஆகவே அநாகரிக வணக்கத்திலிருந்தே நாகரிக வணக்கம் உற்பத்தியாயிற்றென்பதும், அங்ஙனமே சுப்பிரமணிய வணக்கமுமாம் என்பதும் ஒருசிறிதும் பொருந்தாமை காண்க. அறியாமையை அனுசரிக்க அறிவு உதிக்குமென்பது லௌகிக முறைக்காவது அருண் முறைக்காவது சிறிதும் ஏற்புடைத்தாகாதாம். கிறிஸ்துமத முதலிய கற்பனாசமயங்கள் பிறசமயங்களிற் காணப்படும் உண்மைத் துறைகளைத் தாமும் எடுத்தாளத் துணியுமாயினும் அத்துறைகள் அந்தச் சமயங்களுக்கு ஏற்புடையனவாகா என்பது நுண்ணறிவுடையார்க்கு இனிது புலப்படும். சமயநெறிகளிற் காணப்படும் லௌகிக ஆசாரங்கள் காலந்தோறும் திருந்தியும் பிறழ்ந்தும் வருமாயினும், அவற்றின்கண் அமைந்துள்ள உண்மைநிலை அவற்றோடு சகசமாய் அமைந்து விளங்குமன்றி கீழ்நிலைக்கண் நின்று மேல்நிலைக்கு ஏற்றமுறும் என்பது சிறிதும் பொருந்தாது. ஆகவே சுப்பிரமணிய வணக்கத்திற் காணப்படும் உண்மைநிலை வேடவணக்கத்தில்இருந்து பரிணமித்ததென்பது ஒருவாற்றானும் பொருந்தாதெனமுடிக்க.

கிறிஸ்துவின் போதனை.

(Communicated.)

கஉ. "அப்பொழுது வேதபாரகன் ஒருவன் வந்து, போதகரே, நீர் எங்கே போனாலும் உம்மைப்பின்பற்றிவருவேனென்றான்; அதற்கு யேசு "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும்உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை." (மத்-அ-கக-உ௦.) என்றார்.

வேதபாரகன் யேசுவின்மேற் கொண்ட விசுவாசங் காரணமாக "நீர் எங்கேபோனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன்" என்று சொன்னபோது, அவர் அவனுக்குப் போதித்த போதனை சிறிதாவது இயைபுடைத்தாகத் தோன்றவில்லை. "உம்மைப் பின்பற்றி வருவேன்" என்றானுக்கு "மனுஷகுமாரனுக்குத் தலைசாய்க்க இடமில்லை" என்ற போதனை "படுக்கைக்கோட்டைக்கு வழியாது" என்றானுக்கு "கொட்டைப்பாக்கு இருதூறு" என்று விடையிறுப்பது போலும்.

கங. "அவருடைய சீஷர்களில் வேறொருவன் அவரை நோக்கி, ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான்; அதற்கு யேசு மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும் நீ என்னைப் பின்பற்றிவா" (மத். அ-உக-உஉ.) என்றார்.

தன்னைப் பெற்று வளர்த்த பிதாவை அடக்கம் பண்ண விடாது தடுத்த யேசுவின் போதனையை உலகத்திற் தருமத்தைநிலைநிறுத்தவந்தபோதனை என்று சொல்வது கூடுமோ? இக்காலத்துள்ள கிறிஸ்த குருமாருள் எவராவது தமக்குக்கீழ் வேலை பூண்டுள்ள போதகர் ஒருவர்க்கு இங்ஙனமான சட்டமே இடுவாராயின், அந்தக் குருவை உலகம் என்சொல்லித் திட்டாது? தன் பிதாவை அடக்கம்பண்ணத் தனக்கு உத்தரவு கொடுக்கும்படி அந்தச்சீஷன் யேசுவைக்கேட்ட அவ்விதத்தானே அவன் உலகத்தை ஒருங்கே துறந்தவன் அல்லன் என்பது நன்குபோதரும். அங்ஙனம் உலகத்தை ஒருங்கே துறவாதவன் உலகதருமத்தில் விசேடித்ததாகிய தன்பிதாவுக்குரிய அந்திய கடனைச் செய்யவே கடமைப்பட்டவன். அந்தக்கடனைச் செய்யவொட்டாது தடுத்த யேசுவின் போதனையை மெய்யுபதேசம் என்று நாம் கைக்கொள்ளுவதெப்படி? உலகத்தைத் துறந்தவர்கள் தாமும் தங்கள் தங்கள் பெற்றோருக்குச் செய்யவேண்டிய அந்தியகடன்களைச் செய்யவே கடமைப்பட்டவர் ஆவர். தங்கள் உலகபிதாவுக்குரிய கடனைச் செய்யவேண்டா மென்று தடுத்த யேசு பரமபிதாவுக்குரிய கடனை அவன் செய்வானென்று காத்திருந்தமை எங்ஙனமாமோ?

கச. திமிர்வாதகாரன் ஒருவனைநோக்கி "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" என்று கிறிஸ்து சொல்லியபோது, வேதபாரகரிற் சிலர் "இவன் தேவதூஷணம் செய்கிறான்" என்று தமதுமனதில் நினைத்தார்கள் என்றும், அந்நினைவைக் கிறிஸ்து அறிந்து 'நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன?' என்று சொல்லித் திமிர்வாதக்காரனை நோக்கி 'நீ உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டிற்குப் போ' என்று சொன்னார் என்றும், உடனே அவன் எழுந்து தன் வீட்டுக்குப் போனான் என்றும், அப்போது சனங்கள் ஆச்சரியப்பட்டு மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள் என்றும் மத்-கூ-உ-அ-ல் சொல்லப்பட்டிருக்கின்றது.

வேதபாரகர் தம் மனதில் நினைத்த நினைவு முழுதும் சரியானதோர்நினைவேயாகும். என்னை? அவர்கள் கிறிஸ்துவை ஒரு மனுஷனென்றே மதித்தாராகையால், அவர் திமிர்வாதக்காரனை நோக்கி 'உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது' என்று சொல்லியபோது, அச்சொல் ஓர் தேவதூஷணம் என்றே அவர்கள் மனதிற் படத்தக்கது. அங்ஙனம் அவர்களது மனதிற் தோன்றிய எண்ணம் மிகவும் சரியான எண்ணம் என்பது, கிறிஸ்து பாவங்களை மன்னித்தேன் என்று சொல்லிய உடன் திமிர்வாதக்காரன் சுகப்பட்டு எழுந்து செல்லாமையால் நன்கு வலியுறுத்தப்படும். ஆகவே அவர்களுடைய மனதில் எழுந்த சரியான நினைவை நீக்குதற்கு கிறிஸ்து யாதொரு போதனையையாவது போதியாமையாலே, அவர் சனங்களுக்கு உண்மையான விசுவாசத்தை உண்டாக்குதற்கு வந்தவர் அல்லர் என்பதும் சனங்களைத் தாம் கற்ற மாயவித்தைகளினாலே மயக்குதற்கே வந்தார் என்பதும் நன்கு பெறப்படும்.

பாவங்கள்மன்னிக்கப்பட்டனஎன்ற கிறிஸ்து சொல்லியபோது சுகப்பட்டு எழுந்து நடவாத திமிர்வாதக்காரன், "உன்படுக்கையை எடுத்துக்கொண்டு எழுந்துபோ" என்று சொல்லிய உடன் எழுந்து நடந்தானும். ஆகவே கிறிஸ்துவுடைய வித்தை ஒரு சாலவித்தையே என்பது நன்றாகப் புலப்படுகின்றது. இங்ஙனம் அவன் எழுந்து நடந்தபோது சனங்கள் "மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக்கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள்" என்று மாத்திரம் சொன்னார்களாதலால், அப்போதும் அவர்கள் கிறிஸ்துவை ஒரு மனிதன் என்றே மதித்தார் என்பது நன்றாக விளங்கக்கிடக்கின்றது. ஆகவே அவர்களுடைய அந்தச் சரியான எண்ணத்தை நீக்குதற்கு கிறிஸ்து யாதொரு போதனையும் போதியாதபடியால் அவருடைய போதனை உண்மையைப் போதித்தற்கெழுந்த போதனையென்று நாம் ஒருவாற்றானும் சொல்வது கூடாது.

கரு. தலைவன் ஒருவன் யேசுவிடத்தில் வந்து மரித்துப்போன தன் பெண் மகளை எழுப்பித்தரும்படி கேட்க, அவர் அந்தப் பெண் மரித்துக்கிடந்த இடத்திற் சென்று, "இந்தச் சிறுபெண் மரிக்கவில்லை; நித்திரையாய்க் கிடக்கிறாள் என்றார். அதற்காக அவரைப் பார்த்து நகைத்தார்கள். சனங்கள் வெளியே துரத்தப்பட்டபின்பு, அவர் உள்ளே பிரவேசித்து, அந்தச் சிறுபெண்ணின் கையைப் பிடித்தார், உடனே அவள் எழுந்திருந்தாள்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. (மத்-கூ-கஅ-உச).

இந்தப் பெண் மரித்த கதை உண்மைதானு? உண்மையாம் எனின் "இந்தச் சிறுபெண் மரிக்கவில்லை; நித்திரையாய்க் கிடக்கிறாள்" என்று கிறிஸ்து சொல்லியது பொய்யா? அவள் உண்மையளவில் மரிக்கவில்லையாம் என்றால் அந்த உண்மையைக் கிறிஸ்து சனங்களுக்கு நன்றாகப் புலப்படுத்தாமல், அவர்கள் எல்லாம் கிறிஸ்து மரித்தவளைப் பிழைப்பித்தார் என்று விளங்கிக்கொள்ளும்படி ஏன வைத்தார்? எப்படிப்பார்த்தாலும் கிறிஸ்துவுடைய சொல்லும் செயலும் ஒன்றுக்கொன்று மாறாகவே கிடக்கின்றனவென்க.

சமாச்சாரம்.

சுப்பிரிங்கோடு:—யாழ்ப்பாணம் சிறியவல் விசாரணைச் சுப்பிரிங்கோடு வருகிற ஜூலைமீ கஉ௳ ஆரம்பமாகும்.

கலகத்தா பீ. ஏ. பரீக்ஷை:—இப்பரீக்ஷையில் வண்ணார்பண்ணை ஸ்ரீ. வை. நாகலிங்கமவர்களும், மயிலிட்டி எஸ். சுவாமிநாதனவர்களும் தேறியடைந்திருக்கின்றனர். ஸ்ரீ. நாகலிங்கம் இந்துசாதன இங்கிலிஷ் பத்திராதிபர் ஸ்ரீ. அ. சபாபதியவர்களின் மைத்துனர். ஸ்ரீ. சுவாமிநாதர் மயிலிட்டியிலுள்ள ஓர் நல்ல குடும்பத்தைச் சார்ந்தவர்.

பிறக்றர் ஸ்ரீ ஆ. கதிரவேலு அவர்கள்:—சுப்பிரீங்கோட்டுப் பிறக்றரும், யாழ்ப்பாணம் லோக்கல்போட் அங்கத்தவர்களுளொருவரும், யாழ்ப்பாணம் முடிப்புறத்தரணியுமாகிய ஸ்ரீ ஆ. கதிரவேலு அவர்களுக்குச் சமாதான நீதிவான் (J. P.) பட்டமும், சண்ணியப் பொலிஸ்நீதிவான் (U. P. M.) பட்டமும் அளிக்கப்பட்டிருக்கின்றன. இவருக்கு இப்பட்டந் தகுமென்பது நாம் சொல்லவேண்டியதில்லை.

மிருகநிஷேத நிவாரண சங்கத்தாரும் ஆமைகளும்:—மிருக நிஷேத நிவாரண சங்க நிருவாக சபைக்கூட்டமொன்று சென்ற கஅஉ நடைபெற்றபோது யாழ்ப்பாணத்திலே உணவின் பொருட்டுப் பிடிக்கப்படும் ஆமைகளை அவைகள் விலைப்படும்வரைக்கும் ஓர் வசதியாக அடைக்கப்பட்ட இடத்தில் வைக்கவேண்டுமென்றும் ஆமைகளை விற்போர் இந்த இடத்திலேயே வைத்து அவைகளை விற்கவேண்டுமென ஓர் சட்டமேற்படுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பண்ணை ஆயக் குத்தகைகாரரின் முறையீனம்:—யாழ்ப்பாணத்திலே பண்ணைத் துறையிலிருந்து தீவுப்பற்றுக்குப் பிரயாணம் செய்வோ

சின் வசதியின்பொருட்டு ஓர் இழுவைப்பாலம் போடப்பட்டிருக்கின்றது. இப்பண்ணைத்துறை ஆயக்குத்தகையை வாங்கியிருப்பவர் இப்பாலவழியாகச் செல்லும் வண்டிகளுக்குத் தாமவிரைத்தபிரகாரம் கூலிவாங்குகின்றாரென்றும், பாலத்தை இழுத்துச் செல்லும் கூலியாட்களும் பிரயாணிகளைத் தொந்தரவுசெய்து பணம் வாங்குகின்றார்களென்றும் இவ்வாயத்திலுள்ள வள்ளக்காரர் போதிய பிரயாணிகள் சேரும்வரையும் காத்திருப்பதால் பிரயாணிகள் தாங்கள் நினைத்த நேரத்தில் பிரயாணஞ்செய்ய இயலாதிருக்கின்றதென்றும் பலர் முறையிடுகின்றனர். ஆயக்குத்தகைகாரர் பிரயாணிகளிடமிருந்து இன்னவீதமாய்க் கூலியறவிடவேண்டுமென அரசாட்சியார் சிலஒழுங்குகள் செய்திருப்பார்களே. அவ்வொழுங்குகளடங்கிய ஓர்விளம்பரத்தை துறையிலே பிரசித்தமான ஓரிடத்தில் ஒட்டிவிட்டாலென்? அங்ஙனஞ் செய்தால் பிரயாணிகள் யாவரும் தாங்கள் கொடுக்கவேண்டிய கூலியின்னதென்பதை எளிதிலறிந்துகொள்ளலாமன்றோ. இனி வள்ளக்காரர் குறிக்கப்பட்டநேரத்தில் பிரயாணிகளை யேற்றிச்செல்லவேண்டுமென ஒழுங்கு செய்துகொள்ளின் பிரயாணிகள் போதிய ஆட்கள் சேருமவரைக்கும் காத்திருக்கவேண்டிய அவசியம் நேராது. இவையெல்லாம் நமதரசாட்சியார் கவனிப்பது அத்தியாவசியகமே.

'கோபால கிருஷ்ண கோகலே':—இந்த பரதகண்டமென விதந்து சொல்லப்படும் இந்தியாவின் க்ஷேமத்தின் பொருட்டுத் தன் உடல் பொருள் ஆவி மூன்றனையும் அர்ப்பணஞ்செய்து சிலமாசங்களுக்கு முன்னர்ப் பரலோகப்பிராப்தியானவரும் சிறந்த தேசாபிமானியும் இராசதந்திரியும் மகாபண்டிதருமாக விளங்கியவருமாகிய ஸ்ரீமாந். கோகலேயவர்களின் சரித்திரத்தைக் கூறும் ஓர் இனிய தமிழ்வசன நூலாகும். இந்நூல், பூனா பெர்க்கசன் கலாசாலைத் தலைவராகிய ஸ்ரீ. ஆர். பி. பராஞ்சபே எம். ஏ. பீ. எஸ்ஸி. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். இங்ஙனம் தமிழ்மக்கட்குப் பயன்படும்வண்ணம் இதனை மொழிபெயர்த்தெழுதியவர் உறையூர் ஸ்ரீ. உ. வே. அரங்கசாமிராஜூ அவர்கள். இந்நூல் தற்காலத்து மாணவர்கள் எவராலும் இனிது படிக்கற்பாலது. இதன் விலை அணா ௮. பிரதிகள் உ. வே. அரங்கசாமிராஜூ, திராவிடவித்தியாசாலை மானேசர் இராமவர்மபுரம் கொழிஞ்சாம்பாறைபோஸ்ற் என்னும் விலாசத்திற்கு எழுதிப் பெறற்பாலன. எமது பார்வைக்கனுப்பிய பிரதியை உவந்து ஏற்றோம்.

பிறக்றர் ஸ்ரீ நாராயணசாமியவர்களின் மரணம்:—கொழும்பிலே நெடுங்காலமோர் பிறக்றராகவிருந்தவருஞ் சைவாபிமானமுடையவருஞ் சற்குணருமாகிய இவர் இறந்துவிட்டனரென்னுஞ் செய்தியைக் கேட்டு மிக்க துக்கமானோம்.

யானைத்தோல்களும் கொம்புகளும்:—இலங்கையிலிருந்து யானைத்தோல்களும் கொம்புகளும் ௧௯௧௭-ம் ஆண்டு ஜூன் மாதம் ௩௦-ந் தேதி வரைக்கும் பிறதேசங்களுக்கு ஏற்றுமதிசெய்யக் கூடாதென சர்க்கார்ப்பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கின்றது.

கொள்ளை நோய்:—கொழும்பிலே கொள்ளைநோய் வரவர அதிகப்படுகின்றது. சென்ற ௨௨-உ தொடக்கம் ௨௬-உ வரைக்கும் எட்டுப்பேர் இந்நோய்வாய்ப்பட்டிறந்தனர். ௧௮ வயசுப் பிராயமுள்ள ஓர் பறங்கிக்காரப் பெண்ணும் இந்நோய்க்கிரையாயினள்.

இஸ்லாமித்திரன்பத்திராதிபரின் வழக்கு:—பிரசுரிக்கத்தகாத தூஷணையான இரு விஷயங்களைப் பிரசுரித்தார் என்னுங் குற்றச்சாட்டின்நிமித்தம் மூன்றுமாசக் கடுஞ்சிறையும் ௫௦ ரூபா அபராதமும் விதிக்கப்பெற்ற இஸ்லாமித்திரன் பத்திராதிபரின் வழக்கு அப்பீல்கோட்டில் விளங்கப்பட்டு மேற்படி தண்டனை ஒருமாச மூழியமில்லாச் சிறையும் நூறு ரூபா அபராதமுமாக மாற்றப்பட்டது.

ஓர் புத்தாலயத்தில் புதையல்கண்டெடுக்கப்பட்டது:—ருவென்வலை புத்தாலயத்தில் வேலைசெய்துகொண்டிருந்த கூலிக்காரர் ஓர் பெட்டிபோற்செய்யப்பட்டிருந்த ஓர்கல்லைக்கண்டார்கள். இக்கல்லு ஓர் செங்கல்லிலும் சற்றே பெரிதாக அழகுற வெட்டப்பட்டு மேல்மூடியும் உடையதாய் இருந்தது. இம்மூடியை யெடுத்தபோது உள்ளே பொன்னும் பொன்னாற் செய்யப்பட்ட சில சிறு விக்கிரகங்களுங் காணப்பட்டனவாம்.

றேட்டுகளைப் புதியமாதிரியாய்ப் பழுது பார்த்தல்:—கொழும்பிலும் சென்னையிலும் 'அஸ்பல்றம்' என்னும் ஓர் வகைத் தாரைப் பாவித்து றேட்டுகளைப் பழுதுபார்க்கலாமோவென்பதைப்பற்றி ஆலோசனை செய்யப்படுகின்றது. தாரால் செய்யப்படும் றேட்டுகள் நெடுங்காலத்துக்குப் பழுதுபடாதிருக்கக்கூடுமென்றும், தூசி அவ்விதறேட்டுகளில் எழும்பமாட்டாதென்றும், மழை பெய்யுங்காலங்களில் இக்கறேட்டுகளில் சேறுண்டாகமாட்டாதென்றுஞ் சொல்லப்படுகின்றது.

வீடுடைத்துக் களவெடுத்தல்:—கொழும்புத் துறையிலே சென்ற வெள்ளிக்கிழமை யிரவு ஓர் வீட்டுள் யாரோ சிலகள்வர் புகுந்து அங்கிருந்த இருபெட்டிகளை வெளியே தூக்கிச்சென்று அவற்றுளிருந்த பணத்தையும் புடைவையையும் நகைகளையு மெடுத்தபின் அப்பெட்டிகளை அவ்வளவிற்றோனே விட்டுச் சென்றனராம். பணமும் களவுபோன பொருள்களின் விலையும் ௫௦௦ ரூபா வரையிலிருக்குமாம். கள்வர் கொண்டுவந்திருந்த இரு கூரிய கத்திகளையு மவ்வளவிற்றோனே விட்டுச் சென்றனராம்.

பைசைக்கிள் ஏறிப்பழகியபோது மரணமடைந்தது:—கண்டியிலே தெனிக்கப்பறை யென்னுமிடத்தில் ஒரு மகமதியனும் வேறு இருவரும் பைசிக்கிள் ஏறிப்பழகியபோது மகமதியன் றேட்டுப்பக்கத்தில் தண்ணீர் நிறைந்ததும் ஆழமானதுமாயிருந்த ஒரு அகழுள் வீழ்ந்துவிட மற்றவர்கள் ஓடிவிட்டனர். அகழுள் வீழ்ந்தவன் தலையிலும் வேறு இடங்களிலும் மிகக்காயமுற்று ஸ்மரணையற்றுக்கிடந்ததை மறுநாட்காலை சிலர் கண்டு அவனை ஆசுபத்திரிக்குக் கொண்டுபோனபோது அவனங்கே சிறிதுநேரத்தில் இறந்துவிட்டனன்.

புதுவயல் ஞானப்பிரகாசசபையின் முதல்வருஷ நிறைவுவிழாக் கொண்டாட்டம்.

திருவருட்செறிவானே அழைப்புப்பத்திரத்திற் கண்டவாறே சென்ற வைகாசிமீ ௩௧-உ ஆனிமீ ௧-உ ஆகிய இருதினங்களிலும், சென்னைமாநகர் சிவாகஸ்ப மந்திரதத்தலைவர் ஸ்ரீமாந். சதாசிவச் செட்டியாரவர்கள் தலைமையின் கீழ் இச்சபையின் பிரதமவருஷ நிறைவுக் கொண்டாட்டம் இனிது நடைபெற்றது. அதன் நிகழ்ச்சிச் சுருக்கம் வருமாறு:

13-6-16. மங்களவாசரம் காலை.

நகரவாசிகள் யாவருக்கூடி மங்களவாத்திய கோஷத்தோடு, அக்கிராசனாதிபதியவர்கள் தங்கியிருந்த சாலையையடைந்து உபசரித்து வரவேற்று அழைத்துச் சென்றனர். செல்லும்போது ஸ்ரீ. உமாமயீசாசமேத வீரசேகரப்பெருமானை வணங்கிச் சபாமண்டபத்தை யணுகும்போது புகைப்படம் எடுக்கப்பெற்றது. சபையுட் பிரவேசித்தவுடன் திருநெல்வேலி பிர்மஸ்ரீ. அ. மகாலிங்கையரவர்களால் தேவாரதிகள் ஓதப்பட்டன. ஞானப்பிரகாச கலாசாலை மாணவர்கள் சபைவாழ்த்து இராஜவாழ்த்துக்களைப் பாடினார்கள். காரியதரிசிகளுள்ஒருவராகிய நடராஜபுரம் ஸ்ரீமாந். வீர. சோமசுந்தரச் செட்டியாரவர்களால் உபசாரப் பத்திரம் படிக்கப்பட்டது. சபையின் சிறந்த அக்கிராசனாதிபதியும், ஞான: கலாசாலைத் தலைமையாசிரியருமாகிய யாழ்ப்பாணத்து உடுவில் பிர்மஸ்ரீ. வ. மு. இரத்தினேசுவரையரவர்களால் சபையின் அறிக்கைப்பத்திரம் படிக்கப்பெற்றது. தலைவரவர்கள் விஸ்தாரமானதும், சபாலக்ஷண விளக்கமுடையதுமான உபந்நியாஸம் புரிந்தார்கள். பின்பு, பிர்மஸ்ரீ. மீனாக்ஷிசுந்தரையரவர்கள் "கல்விபுகட்டுமுறை"என்னும் விஷயத்தையும், மாணவகன் ஸ்ரீ. ஙா. பழனியப்பன் "சைவம்" என்னும் விஷயத்தையும் அழகாகப் பிரசங்கஞ் செய்தார்கள். தலைவரவர்கள் அபிப்பிராயங்கூறச் சபை நிறைவுற்றது.

13-6-16. மங்களவாசரம் மாலை.

மறுபடியும் மாலை மூன்றுமணிக்குச் சபை தொடங்கப்பட்டது. கண்டனூர் ஸ்ரீமாந். தெ. அரு. சித. இராமநாதச் செட்டியாரவர்கள் "நட்பு" என்னும் விஷயத்தையும், மாணவகன் ஸ்ரீ. சி. வீர. சோம. வீரப்பன் "ஈகை" என்னும் விஷயத்தையும், முறையூர் ஸ்ரீமாந். சு. ப. குமரப்பச் செட்டியாரவர்கள் "நாம் என்ன நிலைமையிலிருக்கிறோம்?"என்னும் விஷயத்தையும், ஸ்ரீமதி. வீர. அ. சோம. தெய்வயானை (மாணவி) "பதிவிரதா தர்மம்" என்னும் விஷயத்தையும், திருவாரூர் "சமவாஸனி"ப்பத்திராதிபர் ஸ்ரீ. டி. எஸ். தியாகராஜஞானியாரவர்கள் 'பருவத்தே பயிர்செய்" என்னும் விஷயத்தையும், சென்னை ஸ்ரீமதி. மங்கையர்க்கரசியார்என்னும் ஆண்டாளம்மாளவர்கள் "மங்கையர்க்கரசியார்" சரித்திரத்தையும், ஸ்ரீ அள. பே. கும. இராமஸ்வாமி "கல்விப்பயன்" என்னும் விஷயத்தையும் பிரசங்கஞ்செய்தார்கள். தலைவரவர்கள் அபிப்பிராயங்கூறவே, அநுட்டானாதிகளுக்காக ஓய்வு விடப்பட்டது. பின்பு தேவாரமோதச்சபைஆரம்பமாயது. மகிபாலன்பட்டி பண்டிதர் ஸ்ரீமாந். மு. கதிரேசச்செட்டியாரவர்கள் "மணிவாசகப் பிரபாவம்" என்னும் விஷயத்தை நன்கு விளக்கிப் பிரசங்கஞ் செய்தார்கள். தலைவரவர்கள் பிரசாரணம் முடிய யாவரும் போசனத்தற்காகச் சென்றனர். பின்பு காரைக்குடி சங்கீத வித்வாம்சர்களான பிர்மஸ்ரீ. சுப்பராமையரவர்களும் சகோதரரும் வீணாகாநஞ் செய்தனர்.

14-6-16. புதவாசரம் காலை.

கடவுள் வணக்கத்துடன் சபை தொடங்கப்பெற்றது. கலாசாலை மாணவகன் ஸ்ரீ. பெ. க. வீர. நாராயணன் "அமர்நீதி நாயனார் சரித்திர"த்தையும், தேவகோட்டை ஸ்ரீ. எ. சாமிநாதபிள்ளையவர்கள் "சிவாகமம்" என்னும் விஷயத்தையும், மதுரை ஸ்ரீ. சுந்தரபாண்டிய ஓதுவாரவர்கள் "நமது கடமை" என்னும் விஷயத்தையும், கோநகர் பண்டிதர் பிர்மஸ்ரீ. அ.கோபாலையரவர்கள் "இல்வாழ்க்கை" என்னும் விஷயத்தையும், சாக்கோட்டை பிர்மஸ்ரீ. கிருஷ்ண சாஸ்திரிகள் "தர்மசிக்ஷை" என்னும் விஷயத்தையும், அமைதியாகவும் உருக்கமாகவும் பிரசங்கித்தார்கள். தலைவரவர்கள் அபிப்பிராயங்கூறவே சபை ஓய்வடைந்தது.

14-6-16. புதவாசரம் மாலை.

மறுபடியும் சபை 3-மணிக்குக் குதூகலத்தோடும்கூடியது. ஈசுவரஸ்தோத்திரத்தின் பின், கலாசாலை மாணவகன் ஸ்ரீ. எ. பெரி. வீர. வீரப்பன் "ஆங்கில அரசாட்சியின் நன்மைகள்" என்னும் விஷயத்தை ஆங்கிலத்திலும், குன்றக்குடி பிர்மஸ்ரீ. விஸ்வநாத சாஸ்திரிகள் "வித்யாதாநம்"என்னும் விஷயத்தையும், பிர்மஸ்ரீ. கோவிந்தராஜையங்காரவர்கள் "மும்மைக்குணம்" என்னும் விஷயத்தையும், ஸ்ரீமதி ஆண்டாளம்மாளவர்கள் "இளசைமாறனார்" சரித்திரத்தையும் முறையாகப் பிரசங்கஞ்செய்தார்கள். அநுட்டானத்திற்காக ஓய்வு.

அப்பால் ஈசுவரஸ்துதி: மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சௌரஷ்டிரதரிசி பிர்மஸ்ரீ. டி. சீ. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள் "தமிழிலக்கணம்" என்னும் விஷயத்தையும், ஆத்தங்குடி பிர்மஸ்ரீ. எம். சுப்பராமையரவர்கள் "நாம் யார்?"என்னும் விஷயத்தையும், பலவான்குடி ஸ்ரீ. வீ. குமாரவிசையரவர்கள் "புருஷார்த்தங்கள்"என்னும் விஷயத்தையும், குன்றக்குடி பிர்மஸ்ரீ இராமசந்திர சாஸ்திரிகள் 'சித்தாந்தம்' என்னும் விஷயத்தையும், அதிக சாதுர்யமாகப் பிரசங்கித்தார்கள். தலைவரவர்கள் தக்க முறையான அபிப்பிராயங்களையும் முடிப்புரைப் பிரசங்கத்தையும் மங்களகரமாகப் பேசினார்கள். தமிழ்ப் பண்டிதரவர்களாலே சகலருக்கும் வந்தனமும் சோபன ஆசீர்வாதமும் கூறவே செயப்பெற்றன. நடராஜபுரம் ஸ்ரீமாந். வீர. சோமசுந்தரச் செட்டியாரவர்கள் அரிய பொன்றியர்ப் படித்தார்கள். இருதினங்களிலும் ஆயிரத்தின் மேற்பட்ட ஆடவர்களும் ஐந்நூற்றின் மேற்பட்டமகளிரும் சமுகமாயிருந்தார்கள். சபையும் அங்கத்தவர்களும் சகலநாதப் பெருமானருளாலே சர்வமங்களம் பெறுவதாக.

ஞான போதினி, புதுவயல்.

தந்திச் சமாச்சாரம்.

(யுத்த சங்கதிகள்)

ஜூன்மீ 19உ.

ஜர்மனியர் வேர்டனிலே மேமீ 31உ வரை 4,15,000 பேரை மாளக் கொடுத்தனரென்பது மறுக்கொணா உண்மையெனச் சொல்லப்படுகின்றது.

ஜூன்மீ 20உ.

புனோதின் என்னுமிடத்துக்குக் கிழக்கே புல்கேரியர் கிரேக்க பூமிக்குட் புகுந்திருக்கின்றனரெனச் சொல்லப்படுகின்றது.

பிரித்தானிய சேனை முன்னிட்டு யுத்தஞ் செய்யுங் காலம் வந்துவிட்டதென்று எம். திரிச்சின் என்பவர் சொல்லுகின்றனர்.

பேர்லின் நகரிலே கடலிராணுவ மந்திரிமாரின் கூட்டமொன்று நடைபெற்றபோது மிரால் வொன் ஹோஸ்றர் என்பவர் எந்தக் கப்பல்களையும் சப்மெறயின் கப்பல்கள் கடலிலமிழ்த்திவிடும்படி செய்யவேண்டுமெனச் சொல்லினர்.

ஜெனரல் பிறசில்லோவ் என்பவரின் கீழ்நிற்கும் சேனையைப் பகைவர் அனேக இடங்களில் மும்முரமாய் எதிர்த்து யுத்தஞ் செய்கிறார்கள். ஸ்தேர் ஆற்றிலே நடந்த சண்டையில் ருஷியர் 3243பேரைக் கைதிகளாகப் பிடித்தனர். லொக்காசி டிஸ்திறிக்கில் ருஷியர் முன் இழந்த நிலங்களைப் பிடித்ததுமன்றி 1,200 பேரையும் பிடித்தனர்.

ஜர்மனியர் கோவெல்என்னுமிடத்திற்குச் செல்லும் புகைரதப்பாதையின் துணைகொண்டு திரளான சேனைகளை 'லகஸ்ற' என்னுமிடத்துக்கு வடபக்கத்தில் கொண்டுவந்து ருஷியரின் பின்னணியைக் குலைத்துவிடத் தெண்டித்து ஜயமடையவில்லை. டப்நோ என்னுமிடத்திலுள்ள புகைரதப்பாதை வழியாக ருஷியசைநியம் லெம்போகவென்னுமிடத்தை நோக்கிச் செல்கின்றது.

தாண்போல் என்னுமிடத்தில் அவுஸ்திரிய ஜர்மனியசைநியம் ருஷியசைநியத்தை எதிர்த்து நிற்கின்றது.

ஜூன்மீ 21உ.

சத்துருக்களின் வல அணியில் நின்ற சேனை பின்னிட்டுச்செல்ல ருஷியர் அதனைத் துரத்திச் செல்கின்றனர். செறெத் ஆற்றுப் பக்கத்தில் ருஷியர் பல கிராமங்களைப் பிடித்தனர். டிவினு பக்கத்தில் ருஷியர் சத்துருக்களின் ஸ்தானங்கள் பலவற்றிற் குண்டுகளைப் பொழிந்தனர். பக்டாட் பக்கத்தில் சத்துருக்களின் காலாட்படையும் குதிரைப்படையும் எதிர்த்து யுத்தஞ் செய்தபோது அதிக சேதமுற்றுப் பின்காட்டின.

வொன்லிங்கின்ஜென் என்பவரின்கீழ் நின்ற இரண்டு டிவிஷன் ஜர்மன்சேனை கொல்கி என்னுமிடத்திற்கு மேற்கே ருஷியரால் ஜெயிக்கப்பட்டது. கோவெல் என்னுமிடத்திற்குப் போவதற்கு இச்சேனை இதுகாறும் தடையாயிருந்தமையால் இது ருஷியருக்குப் பெரும் வெற்றியாகின்றது.

இரண்டு பிரிட்டிஷ் புகைக்கப்பல்களும், இரண்டு இத்தாலிய புகைக்கப்பல்களும், ஆறு இத்தாலிய பாய்க்கப்பல்களும் மத்தித்தரைக்கடலிலே நீரிலமிழ்த்தப்பட்டன.

ஜூன்மீ 22உ.

எகிப்தில் நடந்த சண்டையில் பெருந்தொகையான இந்திய சேனாவீரர் விசேஷமாய் மேஜர் உவில்சனுக்குக் கீழ்நின்ற இந்தியசேனை பிறிகேடியர் பிங்கிளியின் பேருதவி கொண்டு சுவெஸ்வாய்க்காலை நூறுமைல் தூரமளவுக்கு மிக விளிப்புடன் பாதுகாத்து நின்று சத்துருக்களை அணுகவொட்டாது தடுத்தது என்று ஜெனரல் மெக்ஸ்வெல் அறிவிக்கின்றனர். மேற்கு எல்லையில் 15-ம் சீக் பட்டாளத்தார் காட்டிய திறமையைப்பற்றியும் சேர் ஆர். எச். பெவெஸ்வேர் பேர்சியின்கீழ் நின்ற கடலிராணுவம் செய்த உதவியைப்பற்றியும் இவர் விபக்துகூறினர்.

ஒத்திஸ்சாடா என்னும் டச்சுக் கப்பல் நீரிலமிழ்த்தப்பட்டது.

ஜூன்மீ 23உ.

இரண்டு டிவிஷன் ஜர்மன்சேனை கோவெல் என்னுமிடத்துக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அங்கே நிற்கும் ஜர்மன் ஜெனரல் அப்பட்டினத்தைக் கடைசிபரியந்தம் காத்துநிற்கும் தீர்மானமுடையவராயிருக்கின்றனர். லெம்பேர்க்என்னுமிடத்தைக் காப்பதற்கு புறாடியென்னுமிடத்திற்கு நாலு டிவிஷன் ஜர்மன்சேனை அனுப்பப்பட்டிருக்கின்றது.

மக்கம் செரிவ் அவர்கள் மேற்கு அரேபியாவிலும் மத்திய அரேபியாவிலுமுள்ள அராபிச்சாதியாரை தன்பக்கமாய்ச் சேர்த்துக்கொண்டு சுல்தானரசருக்கு விரோதமாய்க் கிளம்பி மக்கம் ஜெட்டா தெயிவ் என்னுமிடங்களைப் பிடித்தனர். தெயிவ் என்னுமிடத்திலிருக்கும் இரு சிறு கோட்டைகளிலன்றி மற்றக் கோட்டைகளில் நின்ற துருக்கிச் சேனைகளெல்லாம் தங்களை ஒப்புக்கொடுத்தன. மக்கத்திலும் தெயிவிலும் எத்தனைபேர் ஒப்புக்கொடுத்தார்களென்பது தெரியவில்லை. ஆனால் ஜெட்டாவில் 45 உத்தியோகஸ்தர்களும் 1,400 பேரும் ஒப்புக்கொடுத்தார்கள்.

துருக்கியரின் சரியற்ற ஆளுகையும் அவர்களது [illegible] அரேபியரை அவர்களதாளுகையினின்றும் விலகச்செய்தன. ஆர்மீனியாவில் ருஷியரடைந்துவரும் ஜயத்தைக்கண்டே இப்போது அவர்கள் இங்ஙனஞ்செய்ய ஏவப்பட்டார்கள். துருக்கியராக இனித் தலையெடுக்கமாட்டாதென்பதையும் அராபித் தலைவர்கள் அறிந்துகொண்டார்கள்.

ஒரு பெரிய சுரங்கத்தை வெடிக்கச் செய்தபின் சத்துருக்கள் இடைவிடாது குண்டுகளைப் பொழிந்து கிவென்சி யென்னுமிடத்திலுள்ள பிரிட்டிஷ் அகழ்களுட் புகுந்தார்கள். ஆனால் உவெல்ஷ் பியூசிலியர்ப் பட்டாளம் அவர்களை எதிர்த்து யுத்தம்செய்து முழுதுந் துரத்திவிட்டது.

ஜூன்மீ 24உ.

டிவின்சுக்குத் தெற்கே சத்துருக்கள் பலமுறை யெதிர்த்து யுத்தஞ்செய்து அபஜயமடைந்தனர். ஒஜின்ஸ்கை வாய்க்கால் கேடுக 21உ மும்முரமான யுத்தம் ஆரம்பமாகி நடைபெறுகின்றது. இருபக்கச் சேனையும் ஒன்றையொன்று ஊடுருவிச் செல்ல எத்தனித்தும் வாய்க்கவில்லை. இந்த யுத்தத்தில் ருஷிய ஜெனரல் தெல்சன்மன் கொல்லப்பட்டார். ஜெனரல் பிறசில்லோவின் அணிக்கெதிரே பிரான்சு யுத்தபூமியிலும் இத்தாலிய யுத்தபூமியிலுமிருந்து சத்துருக்களின் துணைச்சேனைகள் இடைவிடாது வந்துகொண்டிருக்கின்றன.

மியூசுக்கு இடப்பக்கத்தில் மும்முரமான பீரங்கிச்சண்டை நடந்தது. மியூசுக்கு வலப்பக்கத்தில் இராமுழுவதும் மும்முரமான பீரங்கிச்சண்டை நடந்தபின் 8 மணியளவில் 321-ம் மலைக்கும் டாமூப் பீரங்கிமேடைக்கு மிடையில் சத்துராதிகள் பலமுறை மும்முரமாயெதிர்த்துயுத்தஞ் செய்தார்கள். இவர்கள் பிராஞ்சுப்பீரங்கிகளுக்கிலக்காகி அதிக சேதமடைந்தும் 320-ம் 321-ம் மலைகளுக்கிடையில் பிரான்சியரின் முன்னணியிலுள்ள அகழ்களைப் பிடித்தார்கள். ஜர்மனியர் தெறன்றியென்னும் கிராமத்தைப் பிடித்தபோது அதினின்றும் துரத்தப்பட்டார்கள்.

மியூசுக்கு இடப்பக்கத்தில் மும்முரமான பீரங்கிச் சண்டை நடக்கின்றது. வலப் பக்கத்தில் 321-ம் 320-ம் மலைகளுக்கிடையில் பிரான்சியர் முன்னிழந்த இடங்களுள் அதிகப்பகுதியைப் பின் பிடித்தார்கள்.

ஜூன்மீ 25உ.

மியூஸ்நதிக்கு இடப்பக்கத்தில் 304-ம் இலக்க மலையில் குண்டுகள் இடைவிடாது மெல்லமெல்லப் பெய்யப்பட்டதன்றி மற்றைய இடங்களில் யாதும் சண்டை நடைபெறவில்லை. மியூசுக்கு வலப்பக்கத்தில் 321-ம் மலையில் மும்முரமான குண்டுப்பிரயோகம் செய்யப்பட்டது. புளூரி யென்னுமிடத்துக்குக் கிட்ட சத்துருக்கள் சில வீடுகளைப்பிடித்தார்கள்.

புல்கேரியர் மெஸ்ரன் என்னும்ஆற்றைக் கடந்துபோனார்கள் ருப்பல்பாஸ் என்னுமிடத்துக்குக் கிழக்கேயுள்ள நியாபீற்று என்னும் கோட்டையைக் கிரேக்கர் விட்டு விலகினர்.

ருஷியர் டிவினுவில் ஜர்மனியரைப் பின்னிடச்செய்து ஸ்தேர் ஆற்றுப்புறத்திலிருந்த கோட்டையொன்றைப் பிடித்து அதிலிருந்த சேனைகளை வாள்யுத்தம்செய்து துரத்தினார்கள். சத்துருக்கள் "கிவினியஸ்கி" என்னுமிடத்துக்குத் தென்கிழக்கிலே ருஷியரை எதிர்த்து யுத்தஞ் செய்து அவர்களின் அகழ்கள் சிலவற்றுட் புகுந்து பின் அங்கு நிற்க இயலாது பின்காட்டினர். அங்கே 800 பேர் பிடிக்கப்பட்டார்கள். இவர்களுள் அரைவாசிப்பேர் ஜர்மனியர். அகழ்கள் பிணக்குவியலால் நிரம்பின.

ருஷியர் கடும்போர் செய்து புக்கவீனு வென்னுமிடத்தைப்பிடித்தனர். இங்கே 2000 பேர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர்.

கருங்கடலிலே ஒடேசாவுக்குச் சமீபமாய் மோர்கியூதி என்னும் கப்பல் சுரங்கத்தில் அடியுண்டு நீரிலமிழ்ந்திவிட்டது. இதில் பெருநாளுக்குத் தங்கள்தேசம்சென்ற மாணவருட்பட 800 பேர் இருந்தார்கள். இவர்களுள் 400 பேர நீரிலமிழ்ந்தி யிறந்தனர்.

ஜூன்மீ 26உ.

ஜர்மனியர் நேற்று வரவர அதிக மும்முரத்துடன் குண்டுப்பிரயோகம்செய்து 7மணியளவில் புரோயிடிஜெரி யென்னுமிடத்திலும் புளூரி யென்னுமிடத்திலும் வெகு மும்முரமாய்க் குண்டுகளைப் பெய்தார்கள். நாற்பது மணித்தியாலங்களாக மொர்ட்ஹொம்மியென்னுமிடத்திலும் மும்முரமாய்க் குண்டுகளைப் பொழிந்தார்கள். சனிக்கிழமை புளூரியென்னுமிடத்திலே பயங்கரமான தெருச்சண்டை நடந்தது. இருபக்கத்தாரும் வெடிகுண்டுகளை வீசி அகோரயுத்தம் செய்தனர்.

தயோமொன்ற் என்னுமிடத்துக்கு மேற்கே ஜர்மனியர் அபஜயமடைந்து பின்காட்டினர். பியுமின்காட்டுக்கும் சீரோயிஸ்காட்டுக்கு மிடையிலுள்ள அகழுட் சிலவற்றைப் பிரான்சியர் பிடித்தனர். மற்றைய விடங்களில் விசேஷமாய் மோட்ஹொம்மியென்னுமிடத்தில் மும்முரமான பீரங்கிச்சண்டை நடந்தது.

கடிதம்.

விநாயக வணக்கம்.

ஐயா,

விநாயக வடிவத்தைக் குறித்துத் தாங்கள் தங்கள் 36-ம இலக்கப் பத்திரிகையில் எழுதிய அரிய வியாசத்தைக் கண்டு பெருமகிழ்வடைந்தேன். இப்போது தாங்கள் எழுதிவரும் சமயசம்பந்தமான விஷயங்களின் பொருட்டுத் தமிழ் உலகம் தங்களுக்கு மிகவும் கடமைப்பட்டுளது. தாங்கள் விநாயகவடிவத்தைக் குறித்து எழுதிய விஷயத்தைக்கண்ட கத்தோலிக்கர் பின்னரும் சில கருத்துக்களை வெளிப்படுத்துகின்றார். அந்தக் கருத்துகளுக்கு ஆதாரம் யாதாயினும் உண்டோ அல்லது அவரது விவேக ஆற்றல் தான் அக்கருத்துகளுக்கு ஆதாரமோ என்பதை அவர் சொல்லிக் காட்டுகிறாரில்லை.

விநாயகவணக்கம் இந்திரவணக்கத்தைப் போல இற்றைக்கு இரண்டாயிர வருடங்களுக்கு உட்பட்டதல்ல. அது உலகம் அனைத்துக்கும் ஆதிகிரந்தமாகிய வேதத்திலே கூறப்பட்டுளது. இந்த வேதவாக்கியங்களைக் குறித்தும் அக்கத்தோலிக்கர் சிலவாக்கியங்களை எழுதுகிறார். இவர் தமது சமயநூலைப்போல இவை வேறுவகையாயும் விளங்கிக்கொண்டு பெரிதும் அவலப்படுகிறார். இவருடைய சமயநூல் காலத்துக்குக் காலம் இருந்த சில விபரீத அறிவாளரால் எழுதி வைக்கப்பட்ட துண்டுப்

புத்தகங்களின் கோவை என்பது இவருக்கே ஒத்த துணிபாகும். ஆரிய வேதங்கள் அளவில் இந்தத் துணிபைச் சாதித்தல் ஒருவராலும் கூடாது. ஆரிய வேதங்கள்தோன்றிய முறைகள் எல்லாம் அந்த வேதங்களிற்றானே கிரமமாக எடுத்து விளக்கப்பட்டிருக்கின்றன. அந்த முறைகள் உண்மையல்லவென்பது இவர் கருத்தாமாயின் இவர் அவைகளைப் பூரண சாட்சிகொண்டு கண்டித்தல்வேண்டும். இங்ஙனமின்றித் தமது மனம் போனவாறு ஊகிக்கும் இவரது ஊகங்களால் அவைகள் கண்டிக்கப்படமாட்டா என்பதை இவர் அறிவதுண்டானால் இவருக்கும் பிறருக்கும் அதிகம் நன்மையாக இருக்கும். வேதங்களின் பெயரேமுறை. அவற்றின் பொருள்களைப்போலவே அவற்றின் உற்பத்தியும் மிக அந்தரங்கமாயுள்ளது. இந்த அந்தரங்கங்களை இவர் “ஞான்செறி விளங்காயாக” அறிந்துகொள்ளக் கருதுவது முறையல்ல. அவற்றைக் குறித்து அறிய விரும்பினால் தக்க ஆசிரியரை அடுத்துக் கற்றல் வேண்டும். இங்ஙனமின்றி உலகுக்குஆதி கிரந்தமென்று ஐரோப்பிய பண்டிதர்களாற்றானே தீர்ப்பிடப்பட்டதும் பதினாயிர வருடங்களுக்கு முந்தியதென்று தாபிக்கப்பட்டுள்ளதும் மறைநூல் என்று பெயர்வாய்ந்ததும் கிரமமுறைக் கற்றோர்க்கன்றி ஏனையோர்க்கு ஒருசிறிதும் புலப்படா இயல்புடையதும் ஆகிய வேதத்தைக்குறித்து இவர் தமது அற்ப விவேகங்கொண்டு ஊகிப்பது முறையல்ல. அல்லாமலும் அவ் வேதங்களாற்றானே அவற்றின் உற்பத்தி விருத்திமுறைகள் சாங்கோபாங்கமாக விளக்கப்பட்டிருக்கும்போது இவர் அவற்றை எல்லாம் தூரம்போக்கிவிட்டு ஆதாரமற்ற தமது ஊகத்தை மாத்திரம் தூக்கிக்கொண்டு வாததுக்குப் புறப்படுதல் அறிவுடையோர்க்கெல்லாம் பெருநகை விளைக்கும் என்க. எங்கள் வேதத்திலிருந்தெடுத்து இவரது விவிலியநூலிலே புகுத்தப்பட்ட “ஆதியிலே வாக்கிருந்தது; அது தேவனிடத்திருந்தது; அது தேவனாயிருந்தது” என்னும் வாக்கியத்தின் உண்மைப் பொருளைச் சிறிதாவது இவர் அறிந்திருப்பாராயின், வேதங்களைப்பற்றி இவ்வளவாக மோசம் போயிருக்கமாட்டார்.

இனி இவர் விநாயக வணக்கத்தைப்பற்றியும் தமது லௌகிக சாத்திர அறிவுகொண்டு பெரிதும் இடர்ப்படுகின்றார் விநாயகவடிவைப்பற்றித் தாங்கள் எழுதிய எழுத்துகள் எல்லாம் இவருக்குப் புறக்குடத்தில் வார்த்த சலம்போலாயின், எத்துணை நியாய ஆதாரங்களைக் கண்டாலும் தாம் பிடித்ததே பிடி என்று நிற்பார்க்கு நாம் என்ன சொல்லியும் பயன்படமாட்டாது. விநாயகக்கடவுளுக்கு மிருகபலி இடப்பட்டதில்லை என்னும் இந்த ஒரு நியாயங்கொண்டு விநாயக வணக்கம் யானைவணக்கமே என்று ஆவேசங்கொண்டாடுகிறார். காட்டில் உலவும் யானைக்குத் தேங்காய், அவல், மோதகம் முதலிய உணவுகள் உண்டாமோ? விநாயகப் பெருமானுக்கு நிவேதிக்கும் நிவேதன மாத்திரையால் அவரை ஒரு யானை என்று சாதித்துவிடக் கோருகட்டிநிற்கும் நமது கத்தோலிக்க நண்பர் யானைகள் காடுகளிலே தேங்காயும், அவலும், சருக்கரையும், மோதகமும் உண்பனதாமோ என்பதைச் சற்றே தலையைக் குனிந்து சிந்திக்கக்கடவர். தேங்காய், அவல், மோதகம் என்பனவற்றின் தத்துவார்த்தங்களை இவர் எம்மிடத்திற் கற்றுக்கொள்வதற்காக ஒருபோது இவ்வாதத்தை ஆரம்பித்திருக்கலாம். ஆனால் நாம் “பன்றிக்குமுன்னே முத்துகளை எறியமாட்டோம்” தத்துவார்த்தங்கள் என்று சொன்னவுடனே இவருக்கு அவற்றைக்குறித்து நகையுண்டாகின்றது. சமயத்தின் உட்பொருளை அறியாது வெளித்தோற்றமாகிய தாடிச் சமயத்தையே சமயம் என்று தூக்கிச் சுமந்துகொண்டு திரியும் இவர்போல்வார்க்குத் தத்துவார்த்தங்கள் எல்லாம் நிம்பரசமாகவே இருக்கும்.

கடவுள் எங்கள் அறிவில் தமது உண்மை ஞானத்தை உரைத்தற்குரிய வடிவத்தையே கொள்வர். வடிவம் எல்லாம் வரையறுப்பாடமைந்த இந்தப் பௌதிகப்படிக்கே உரியனவாதலின், நாமிந்தப் பௌதிகப்படியையே கடவுளாகக்கொண்டு வணங்குகின்றோம் எனபது சமயத்தின் உண்மை நிலையை அறியாத மடவோர் கருத்தேயாகும். இங்ஙனமே விநாயக வணக்கமுமாம். விநாயகக்கடவுள் தமது பிரணவ சொரூபத்தை எமது அறிவிற்றிடம்பெற உணர்த்துதற்காக அச்சொரூபத்தோடு ஒற்றுமைபூண்டுள்ள யானை முகத்தைக் கொள்வாராயின், அவரை ஒரு யானையே என்று கொள்வது மணங்கமழ்கின்றமலரைச் சூடிவருவான் ஒருவனை அம்மலரைப் பூக்கும் மரம் என்று சொல்வதுபோலும் ஓர் மடமையாம். இந்துக்களாகிய நாங்கள் எப்போதாவது மிருகவணக்கம் செய்து வந்தேம் என்று சாத்திர ஆராய்ச்சிசெய்தார் எவராவது சொல்லியதில்லை. நாங்கள் வழிபட்டுவந்த கடவுளர்க்கு வாகனங்களாய் அமைந்த காரணம்பற்றி நாம் ஓர் ஓர் மிருகத்தைப் போற்றிவந்தமையால் எம்மை மிருகவணக்கக்காரர் என்பது அறிவை அபாவனைபண்ணியதோர் பேதைமை மாத்திரமேயன்றி மற்றன்றென்பது நன்கு பெறப்படும். இந்துக்கள் மிருகவணக்கம் செய்தார் என்பதற்கு ஆதி கிரந்தமாகிய வேதங்களிலே ஒரு சொல்லாவதில்லை. அவர்கள் ஓர் ஓர் மிருகத்தைப் போற்றிவந்தமைக்கு நியாயம் அந்த வேதங்களிற்றானே விளக்கக் காட்டப்பட்டிருக்கின்றது. இங்ஙனமாகவும் ஆதாரம் சிறிதுமின்றி இந்துக்களை மிருக வணக்கக்காரர் என்று தாபிக்க முற்பட்டு நிற்பது நமது கத்தோலிக்க குருமாரது அழுக்காற்றையே காட்டிநிற்கும் என்க. வேதங்களிலே இந்துக்களது வணக்கப்பொருள் இது என்பது வெள்ளிடைமலைபோற் காட்டப்பட்டிருக்கவும் தமது குசைமதி ஒன்றையேகொண்டு இந்துக்களை மிருகவணக்கக்காரர் என்பது “கல்லாதான் கற்ற கவியேயாகும்.”

யேசு மனிதனாகவே பிறந்து மனிதனாகவே வளர்ந்து மனிதனாகவே இறந்திருப்பவும் அவரது வணக்கம் தேவ வணக்கமாம்! விநாயகக்கடவுள் தேவனாக அவதரித்து, தேவனாகத் தமதடியார்க்கருள்சுரந்து தேவனாகத் தமதுண்மையைப் பலப்பல சம்பவங்கொண்டுகாட்டி, எப்போதாவது ஒரு மாதா உதரத்தின் வாய்ப்பட்டுப் பிறந்தார் என்றாவது, தமது உடம்பைவிடுத்து இறந்தார் என்றாவது எங்காயினும் மறந்தும் ஒருசொல் காணப்படாதிருப்பவும், அவரது வணக்கம் மிருகவணக்கமாம்! கலிகாலம் இன்னும் என்செய்யாதோ நாம் அறிகிலம்!

விநாயக உற்பத்தியைக் குறித்துப் புராணங்கள் எல்லாம் பலவாறு எடுத்துக்கூறும்சரித்திரங்களின் தத்துவார்த்தங்களை அறியுந்தாமின்றி நமது கத்தோலிக்கர் மிக மோசம்போகிறார். இந்தச் சரித்திரங்களுக்குத் தத்துவார்த்தம் ஒன்று இல்லையாயின், அறிவிற்சிறந்துவிளங்கிய புராண ஆசிரியோர் அவற்றைச் சிறிதாவது கைக்கொண்டிருக்கமாட்டார் என்பதை இவர்கள் சற்றே ஊன்றிச் சிந்திக்கக்கடவர். இவர் விநாயகக்கடவுளது மூலவடிவின் அந்தரங்க அர்த்தத்தை விளங்கிக்கொள்ளும் வன்மையின்றி யானைவடிவத்தைப் பிற்காலத்துள்ளார் மானுடவடிவோடு சம்பந்தஞ்செய்து விட்டனர்என்கிறார். அவர்கள் எல்லாம் அங்ஙனஞ் செய்தபோது இவர் கூட இருந்து கண்டனரா? இவருடைய இந்தக் கூற்றுக்கு ஆதாரம்யாது? இவரது குசைமதி மாத்திரமேயோ? யானையைத் தெய்வமாகக் கொண்டார் தாம் அமைத்த உருவங்களில் யானை வடிவத்தை அன்றி மனிதசொரூபத்தை அதன்கண் இயைத்தற்கு யாதாயினுமோர் இயைபில்லை என்க. அவர் அங்ஙனம் இயைத்தமையானே அவரதுவணக்கப் பொருள் யானை அல்ல என்பது இனிதுபோந்திடும்.

விநாயகதாசன்.

சிவக்கொலை.

ஐயா,

சிவக்கொலையைக் குறித்துத் தாங்கள் விரிவுற எழுதிய வியாசங்களால், அக்கொலை சைவசமயத்தார்க்கு முழுதும் மாறானதொன்றென்பது சிறுவரும் அறியக்கிடக்கின்றது. இங்ஙனமாகவும் இந்த வாதத்தை மூட்டிய கத்தோலிக்கர் மீட்டும் எழுந்துநின்று வேதங்களிலே மிருகபலி விதிக்கப்பட்டதென்று வெகு பிரயாசைகொண்டு மிக விரிவாக எழுதித் தமது நேரத்தை வீண்போக்குகிறார்.

வேதங்களிலே மிருகபலி விதிக்கப்பட்டதென்பதைத் தாங்களே பரிபூரணமாக ஒத்துக்கொண்டு அதற்குத் தக்க சமாதானம் சொல்லி முடிந்தபின் இந்தக் கத்தோலிக்கர் மீட்டும் அதைத் தூக்கி எடுக்கவேண்டிய அவசியம் சிறிதும் இல்லையே.

வேதங்களிலே எங்கேயாவது எமது உணவின் பொருட்டாகச் சிவக்கொலை செய்யும்படி விதிக்கப்பட்டிருக்கின்றதோ என்பதே எடுத்துக்கொண்ட வாதவிஷயம். இது வேதங்களில் மிருகபலி விதிக்கப் பட்டதென்பதைக் காட்டுமுகத்தால் தாபிக்கப்பட்டுவிடுமா? வேதங்களில் உணவின் பொருட்டுச் சிவக்கொலை விதிக்கப்பட்டதில்லை என்பதற்குப் போதியபிரமாணம் தாங்கள் காட்டி இருக்கவும், நமது கத்தோலிக்க சிநேகிதர் கண்ணை மூடிக்கொண்டு மிருகபலியைக்கொண்டிழுப்பது நீதியல்லவே.

சிவக்கொலைக்கும் மிருகபலிக்கும் உள்ள பேதம் இவருக்கு விளங்காதுபோலும்.

மிருகபலிதானும் எந்த யுகத்துக்குரியது? யாரால் செய்யத்தக்கது? என்கருதிச் செய்யப்படுவது? என்பனமுதலிய விபரங்களைஎல்லாம் தாங்கள் நன்குற விளக்கி இருப்பவும் அவற்றை மறைத்துவிட்டு வேதங்களில் மிருகபலி உண்டென்று மாத்திரம் இவர் மீட்டும் மீட்டும் சொல்லிக்கொண்டிருப்பதால் இவருக்காவது பிறருக்காவது யாதாயினும் ஓர் பயனுண்டா?

இங்ஙனம்,
ஓர் மாணவகன்.

[கத்தோலிக்கர் எழுதிய விஷயத்திலே நாம் உத்தரம் சொல்லவேண்டிய நியாயம் யாதாயினும் இருந்தால் நாம் உடனேதானே பதில் கொடுத்திருப்பேம். இ-சா-பத்.]

விளம்பரம்.

பனார்ஸ் பட்டுச்சேலை.

1. சிகப்பு, ரேஸ், பச்சை, புளு, ஊதா, வெளுர்ரேஸ், வெளுர்பச்சை, லைட்புளு, பிங்க்கலர் இன்னும் பலமாதிரி நிறங்களில் உடல் பூராவும் பட்டில் பலவித பூ கொடி வேலைகள் செய்த சரிகை பனார்ஸ் கரை பனார்ஸ் முந்தி 16 முழம் சேலை ரூ 23 முதல் 25 வரை.
2. மேற்படிகரையில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்ட 16 முழம் சேலை ரூ 30 முதல் 35 வரை.
3. மேற்படி சரிகை பனார்ஸ்கரை உடல் பூராவும் சரிகைமத்தாப்பு பெரிய கொட்டடி 16முழம் சேலை ரூ 35 முதல் 40 வரை.
4. மேற்படி உடலில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்டது 16 முழம் சேலை ரூ 40 முதல் 45 வரை.
5. மேற்படி சரிகை பனார்ஸ்கரை உடல் பூராவும் சரிகைமத்தாப்பு சன்னக் கொட்டடி 16 முழம் சேலை ரூ 45 முதல் 50 வரை.
6. மேற்படி உடலில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்டது 16 முழம் சேலை ரூ 50 முதல் 55 வரை.
7. மேற்படிசரிகை பனார்ஸ்கரையில் உடல் பூராவும் சரிகை நக்ஷத்திர புட்டா போட்ட 16 முழம் சேலை ரூ 45 முதல் 50 வரை.
8. மேற்படி நிறம் சரிகை மத்தாப்புக்கரையில் மத்தாப்பு முந்திபோட்ட 16 முழம் சேலை ரூ 30 முதல் 35 வரை.
9. மேற்படி நிறம் சரிகை மத்தாப்புக்கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்ட 16 முழம் சேலை ரூ 35 முதல் 40 வரை.
10. மேற்படி மத்தாப்பு சரிகை கரையில் உடல் பூராவும் சன்னமாக மத்தாப்பு சரிகை கொட்டடி 16 முழம் சேலை ரூ 55 முதல் 60 வரை.
11. மேற்படி கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்ட 16 முழம் சேலை ரூ 60 முதல் 65 வரை.
12. மேற்படி சாதா பனார்ஸ்கரையில் உடல் பூராவும் நெருக்கு ஊசி வாணம் மத்தாப்பு சரிகை கொட்டடி 16 முழம் சேலை ரூ 75 முதல் 80 வரை.

சகாயவிலை! சகாயவிலை!!
கல்யாண பட்டுச் ஜவுளிகள்.
இந்தியர்களால் தயார் செய்யப்பட்டது.
நம்பிக்கையும் நாணயமும் நயமுமுள்ள தினுசுகள்.

குறிப்பு.

மதுரையிலிருக்கும், மு. க. ராமய்யர் அன்சன்ஸ் ஜவுளி கம்பனியென்றால் உலகம் பூராவும் நன்றாய் அறிவார்கள். அனுபவம் பெற்றுத் தேர்ந்த நெசவுகாரர்களால் தயார்செய்து வருகின்ற விசேஷமான ஜவுளித் தினுசுகள்.

பாவிப்புக்கும் சலவைக்கும் பரிசுத்தமாகவும், துலாம்பரமாகவும் விளங்கும் படியான மிகவும் உயர்ந்த சரிகை, சாய்ம், பட்டு நூல்களில் தயார் செய்யப்படுகின்றது.

ஒருமுறை எங்கள் கம்பேனி ஜவுளிகளைப் பாவித்தவர்கள் எப்போதும் எங்கள் ஜவுளிகளை உபயோகிக்க மனமுள்ளவர்களாயிருப்பார்கள்.

கல்யாணச்சடங்கு முதலிய விசேஷகாலத்தில் உபயோகிக்கும்படியான மேன்மைபெற்ற பட்டுச் ஜவுளிகளும் சாதாரணமாக எப்போதும் பாவிக்கக்கூடிய பலமாதிரி நூதன ஜவுளிகளும் ஏராளமாய்த் தயார்செய்யப்படுகின்றது. கொழும்பு, கண்டி, காலி, மட்டக்களப்பு, திரிகோணமலை, யாழ்ப்பாணம் ரெங்கூன், பினங்கு, சிங்கப்பூர், கோலாம்பூர்முதலிய அனேக இடங்களிலிருக்கும் வியாபாரிகளுக்கும், கமிஷன் ஏசண்டுகளுக்கும் சொந்தப்பாவிப்புக்காரர்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் பிரபுக்களுக்கும் தோட்டத்துக் கங்காணி கணக்கப்பிள்ளை கண்டக்டர் முதலிய யாவர்களுக்கும் எங்கள் கம்பேனி ஜவுளிகள் ஏராளமாய் அனுப்புகிறோம்.

இதுவரையிலும் எங்கள் கம்பேனியில் ஜவுளிகள் வாங்கி வருகின்றவர்களும் இனிமேல வாங்குகிறவர்களும் அவரவர்கள் வளவிலும் அவரவர்கள் சொந்தக்காரர்கள் வளவிலும் சிநேகிதர்கள் வளவிலும் இப்போது நடக்கப்போகிற கல்யாணச் சடங்குகளுக்கும் முக்கியமாய்த் தேவையான கூறைப்புடவைகளும், தவுசுகளும், சால்வைவேட்டிகளும், இன்னும் பலமாதிரித் தினுசுகளுக்கும் முன்னாடியே எங்கள் கம்பேனிக்கு ஆர்டர்கொடுத்து விருப்பமுள்ள தினுசுகளை பெற்றுக்கொண்டு பெரும் லாபமும் நயமும் அடையவேண்டியது.

சில கூறைப் புடவைகளின் விலைகளும் தினுசுகளின் விபரமும் இதில் தெரிவித்திருக்கிறது. மற்றத் தினுசுகளின் விபரங்களை தெரிந்துகொள்ளவேண்டியவர்கள் கடிதமூலமாக விலாசம் தெரிவித்தால் கேட்லாக் இனாமாக அனுப்பக்கூடும்.

வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாயவிலைக்குத் தேவையுள்ள தினுசுகள் அனுப்பக்கூடும்.

இலங்கை, பர்மா, சிங்கப்பூர், பினங்கு முதலிய இடங்களுக்குச் ஜவுளிகள் தபால் வி. பி. பார்சலாக அனுப்பக்கூடும்.

F. M. S. சைசேர்ந்த கோலாலம்பூர் முதலிய இடங்களுக்குச் ஜவுளிகள் பாங்குமூலமாய் அனுப்பக்கூடும்.

முக்கிய கவனிப்பு.

தேவையான நிறங்களும், விலையும், நம்பரும் நன்றி விபரமாய் எழுதவேண்டியது.

(தொடர்ச்சி.)

13. மேற்படி கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்டு மேற்படி உடல்சரிகைகொட்டடி 16 முழம் சேலை ரூ 80 முதல் 85 வரை.
14. மேற்படி கரையில் ரெட்டக்கரையாகவும் கரைக்குக் கொடிபேட்டுகள் வைத்த உடல்சரிகைகொட்டடி 16முழம் சேலை ரூ 85 முதல் 90 வரை
15. மேற்படிமாதிரிக் கரையில் உடல் பூராவும் சரிகை ரெட்டக்கொட்டடி நெருக்கு ஊசி வாணக்கொட்டடி 16 முழம் சேலை ரூ 100 முதல் 120 வரை.
16 மேற்படி கரையில் உடல் பூராவும் சரிகைஜோட்பப்ளிவாணத்தார் கொட்டடி16முழம்சேலை ரூ120முதல் 150வ.
17. மேற்படி ஒற்ற பனார்ஸ் கரையில் உடல் சரிகை கொட்டடியில்சரிகை புட்டா சேலை ரூ 75 முதல் 80 வரை.
18. மேற்படிமாதிரிஉடலில் கரைக்கு ரெட்டக் கரையாகவும் கொடிபேட்டுகள் வைத்த சேலை ரூ 100 முதல் 120 வரை.
19. காஸ்மீர் பட்டில் உடல் சாதா கரைக்கும் முந்திக்கும் சரிகைவேலை செய்த ரேஸ், சிகப்பு, பச்சை, ஊதா நிறமுள்ள சேலை ரூ 20 முதல் 25 வரை.
20. மேறபடி உடல் சரிகை புட்டா சேலை ரூ 27 முதல் 35 வரை.

(கொர்நாட்டுப் புடவை.)

21. மேற்படிநிறங்களில் உடல் சாதா முந்தி சரிகைவேலை மானம் சேலை ரூ 17 முதல் 20 வரை.
22. மேற்படி சரிகை ருத்திராக்ஷக் கரைச் சேலை ரூ 20 முதல் 25 வரை.
23. மேற்படி சாதாக்கரையில் உடல் சரிகைகொட்டடிசேலை ரூ25 முதல்30வ.
24. மேற்படி சரிகை ருத்திராக்ஷக் கரையில் உடல்சரிகை கொட்டடி சேலை ரூ 35 முதல் 40 வரை.
25. உடல் மஞ்சள் நிறம் ஜோட்டு பப்ளி, வைடூரிய பப்ளி, கூறை முகி சேலை ரூ 15 முதல் 25 வரை.
26. மேற்படி சத்தப்பட்டு நயம் கொட்டடிசாயச்சேலை ரூ 25முதல் 30வரை.
27. மேற்படி கரைக்கும் முந்திக்கும் சரிகைபோட்டசேலை ரூ 30மு. 35வரை.

மு. க. ராமய்யர் அன்சன்ஸ், மேலக்கோபுரவாசல்,
போஸ்ட் நம்பர் 48 மதுரை, தென் இந்தியா.
M. K. Ramier and Sons. West Tower St.
Post No. 48 Madura, South India.

வான்முகில்வழாதுபெய்கமலிவளஞ்சுரக்கமன்னன், கோன்முறையரசுசெய்கக்குறைவிலாதுயிர்கள்வாழ்க, நான்மறையறங்களோங்கநற்றவம்வேள்விமல்க, மேன்மைகொள்சைவநீதிவிளங்குகவுலகமெல்லாம்.

☞ Printed and published by S. Kandiah Pillai, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.